# கந்தளாய் பிரதேச சபை
# திருகோணமலை மாவட்டம்

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 19 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2012 செப்தெம்பர் 12 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 டிசெம்பர் 23 ஆந் திகதியன்று சபையின் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரீசீலனைகளிருந்து தென்படுவதும் எனக்குச் சமர்ப்பிக்கப்பட்ட அதி உயர் தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய கந்தளாய் பிரதேச சபையின் 2012 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் பொருட்டு முறையான கணக்கீட்டு அறிக்கைகள் பேணப்பட்டுள்ளன என்றும் தலைவருக்குச் சமர்ப்பிக்கப்பட்ட எனது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிசார் கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களைத்தவிர, 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான கந்தளாய் பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்பான நிலைமை மற்றும் அத் தினத்தில் முடிவுற்ற அதன் செயற்பாட்டு நடவடிக்கைகளது நிதிசார் விளைவுகளும் காசுப்பாய்ச்சலும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தென்படும் விதத்தில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கிசைய நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளனவென்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

பின்வரும் அவதானிக்கப்பட்டன.

(அ) நிதிசார் கூற்றுக்களைத் சமர்ப்பிக்கையில் பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிசார் கூற்றுக்களில் வெளிக்கொனரப்படவில்லை.

(ஆ) செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கும் வருவாயை சம்பாதிப்பதற்குமென பயன்படுத்திய ரூபா 24,231,745 க்கான நிலையான சொத்துக்களு தேய்மான நிதியேற்பாடு செய்யப்படவில்லை. இதனால் உள்ளவாறான செலவினம் கணக்குகளில் காட்டப்படவில்லை.

**1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2011 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்ட பிரதேச சபையினது கட்டிடத்தின் ஆகுசெலவாகிய ரூபா 11,881,502 நிலையான சொத்தின் கீழ் கணக்கிலிடப்படவில்லை.

(ஆ) பிரதான பேரேட்டின் பிரகாரம் திரண்ட நிதியக் கணக்கின் ஆண்டின் இறுதியிலான மீதி ரூபா 48,180,304 ஆகும். இது நிதிசார் கூற்றுக்களில் ரூபா 48,186,304 ஆகக் காட்டப்பட்டுள்ளது. இதனால் ரூபா 322,370 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

**1.3.3 பெறவேண்டிய கணக்குகள்**

ஓராண்டைக் கடந்துவிட்ட ரூபா 1,287,648 கூட்டுத்தொகையுடைய ஊழியர் கடன் முற்பணத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**1.3.4 கணக்காய்விற்கான சான்றின்மை**

நிலையான சொத்துப் பதிவேட்டைப் பேணாமை, நிலையான சொத்துப் பெறுமதிக்கான விரிவான தகவல்களைச் சமர்ப்பிக்காமை, பெறவேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்கு மீதிகைளத் திரண்ட நிதியத்திற்கு மாற்றஞ் செய்வது தொடர்பான போதியளவு தகவல்களைச் சமர்ப்பிக்காமை என்பவற்றால் ரூபா 39,617,253 கூட்டுத்தொகையுடைய சொத்துக்களையும் பொறுப்புக்களையும் கணக்காய்வில் திருப்திகரமாகச் சரி, பிழை பார்க்க முடியவில்லை.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை பின்வருமாறு.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1989 ஏப்ரல் 17 ஆந் திகதிய 554/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1988 பிரதேச சபைகள் (நிதியும் நிர்வாகமும்) விதிக்கோவையின் 59 ஆம் விதி | சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் உள்ள வியாபார நிறுவகங்கள் தொடர்பாகக் கணிப்பீடு மேற்கொள்ளப்படவில்லை. |
| (ஆ) 1988 பிரதேச சபைகள் (நிதியும் நிர்வாகமும்) சட்டம் 1989 16(1) ஆம் பிரிவின் இணைந்த பிரிவு II | அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களுக்கான பதிவேடு ஒன்று பேணப்படவில்லை. |
| (இ) பொது நிர்வாக, மாகாண சபைகள், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளரது 1990 ஒக்டோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்கச் சுற்றறிக்கை | ஆறு மாதத்திற்கொருமுறை வாகன எரிபொருள் நுகர்வு பரிசீலிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாமை |
| (ஈ) இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணம் 396 | வழங்கப்பட்டு 6 மாதங்களுக்கு மேல் கொடுப்பனவுக்குச் சமர்ப்பிக்கப்படாதிருக்கும் ரூபா 302,184 க்கான 26 காசோலைகள் சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுக்கப்படாமை. |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

2012 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 1,533,325 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 18,235,596 ஆகும்.

### 2.2 வரவு, செலவுத் திட்டக்கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் வருடாந்த வரவு, செலவுத் திட்டம் நிதிக்கட்டுப்பாட்டுச் சாதகமாகப் பயன்படுத்தப்படாத சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

### 2.3 வருவாய் நிர்வாகம்

#### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டுச் சமர்ப்பிக்கபட்ட மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளவாறான வருவாய், வருவாய் நிலுவை தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| | வருவாய்க்கான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 |
| (i) | தீர்வையும் வரியும் | 4,327 | 5,403 | 8,955 |
| (ii) | குத்தகை வாடகை | 5,437 | 3,007 | 1,856 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 424 | 1,120 | - |
| (iv) | பிற வருவாய் | 25,405 | 18,396 | 18,608 |

**2.3.2 முத்திரைக் கட்டணம்**

கிழக்கு மாகாண சபையிடமிருந்து 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய ரூபா 738,768 கூட்டுத்தொகையுடைய முத்திரைக் கட்டணத்தைப் பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**2.4 நிலையான வைப்புகள்**

2005 செப்டம்பர் 08 ஆந் திகதியன்று வைப்பிலிடப்பட்ட ரூபா 4 மில்லியனுக்கான நிலையான வைப்பு முன்னாள் சபைச் செயலாளரால் அபிவிருத்திப் பணிகளுக்காக 2010 ஜனவரி 5 ஆந் திகதியன்று மீளப் பெறப்பட்டிருந்தது. அன்று அதில் ரூபா 1 மில்லியன் சபையின் நடமுறைக் கணக்கில் செலவு வைக்கப்பட்டு எஞ்சிய ரூபா 3 மில்லியன் அவரால் சபைக்கு வழங்கப்படவில்லை. இது தொடர்பாக இலங்கை குடியரசின் தாபனவிதிக்கோவையினது II ஆம் பகுதியினது XLVIII அத்தியாயத்தின் பிரகாரம் முறையான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கீழே குறிப்பிடப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் சபையின் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வரவு, செலவுத் திட்டக் கட்டுப்பாடு

(இ) வருவாய் நிர்வாகம்

(ஈ) சொத்து முகாமைத்துவம்

(உ) மனிதவள முகாமைத்துவம்